# ஆண்டின் 28ஆம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-10-10

(*இன்றைய வாசகங்கள்:*

*சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம்:* 7:7-11,

*பதிலுரைப்பாடல்: திபா.* 90:12-17,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்.* 4:12-13,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 10: 17-30)

**திருப்பலி முன்னுரை:**

*இயேசுகிறிஸ்துவின் அருமையான சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவரையும் ஆண்டின்* 28ஆம் *ஞாயிறை கொண்டாடி மகிழ அன்புடன் அழைக்கின்றோம்.*

*கடவுளைவிட உலகப் பொருட்களில் அதிகப் பற்று வைக்கும் எவரும் இறையாட்சில் நுழைய முடியாது என்பதை உணர இன்றைய திரு வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. மனிதர்களாகிய நாம் அனைவரும் கடவுளை அறிந்து, அவரை அன்புசெய்து வாழவே படைக்கப்பட்டிருக்கிறோம். இறை உறவிலும், மனித உறவிலும் நாம் வளர்ச்சி காண கடவுள் வழங்கியுள்ள பத்து கட்டளைகள் நமக்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளன. அவற்றைச் சுருக்கி ஒரே அன்பு கட்டளையாக இயேசு நமக்கு வழங்கினார். நமது அன்பு செயல் வடிவம் பெறும் பொழுதுதான் நாம் இறையாட்சிக்கு நெருக்கமானவர்களாக மாற முடியும். செல்வம், உறவு, புகழ் என எது அன்புக்குத் தடையாக இருந்தாலும் அங்கு இறையாட்சி தடுக்கப்படுகிறது. உலகப் பொருட்களைப் புறக்கணித்து இறையாட்சியை விரும்பித் தேடும் நல்ல மனம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***ஞானத்தின் ஊற்றாம் இறைவா,***

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமது ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பெற்று, திருச்சபையின் மக்கள் அனைவரையும் ஞானத்தில் வழி நடத்த தேவையான அருளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***ஒப்பற்ற செல்வமான இயேசுவே, உம்மைப் போற்றுகிறோம்.***

*உம்மைவிடப் பெரிய செல்வம் எதுவுமில்லை என்று நாங்கள் உணரச் செய்யும். எங்களிடம் இருக்கும் செல்வம், ஆற்றல்கள், திறமைகள் அனைத்தையும் பிறரோடு நாங்கள் பகிர்ந்து வாழ அருள்தாரும். இதனால், நாங்கள் விண்ணகத்தில் செல்வர்களாய் மாறிட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!***

*எமது குடும்பங்களுக்காக உம்மிடம் வருகின்றோம். இன்றைய நாட்களில் குடும்ப உறவுக்கும், ஒற்றுமைக்கும், மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து குடும்பங்களில் அமைதியும், மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிலவ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***நீதியின் ஊற்றாம் இறைவா,***

*உலகில் பண ஆசை, பதவி மோகம், மத வெறி, தன்னலம், இன வெறி போன்ற காரணங்களால் நீதி மறுக்கப்படும் இடங்கள் அனைத்திலும் உம் இறையாட்சியின் மதிப்பீடுகள் விதைக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வாழ்வை வெற்றியாக்கும் விண்ணகத் தந்தையே!***

*தொற்றுநோயின் தாக்கம் குறைந்து, கல்விமனைகள் திறக்கப்படவும், எங்கள் பிள்ளைகள் மீண்டும் தங்கள் பள்ளி பருவத்தை முழுமையாக அனுபவித்து, கல்வியிலும் பிறர் அன்பிலும், இறை நம்பிக்கையிலும் சிறந்து விளங்கத் தேவையான ஞானத்தையும், மன உறுதியையும் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***அன்புத் தந்தையே இறைவா!***

*உமது அன்பையும், இரக்கத்தையும் பெற்று மகிழும் எம் இளைஞர்கள் உமது வார்த்தைக்கு மட்டுமே என்றும் பணிந்து உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***உமக்காகக் காத்திருப்போர்க்கு அமைதி அளிக்கும் இறைவா!***

*உம் திருஅவை இன்று சந்திக்கும் சவால்களையும், கொடுமைகளையும், அதற்கு ஏற்படும் அவபெயர்களிலிருந்தும் காத்தருளும். பொறுமையும், அமைதியும் இறுதியில் வெற்றிப் பெறும் என்ற திடமான நம்பிக்கையை எங்கள் உள்ளங்களில் நிலைபெற, உமது ஞானத்தையும் ஆசீரையும் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்..*

***துன்பங்களை நீக்குபவராம் இறைவா,***

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும், அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*